# <u>கடலூர் பெருநகராட்சி</u>

**2019ம் ஆண்டு ஜுன் மாதம் 26–ம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 26.06.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

## *பொருட்கள்*

**1)**

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். **48800/2006**/எல் நாள் **20.06.2019**ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் **1.04.2013** அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் **13.06.2013** அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் **26**, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ**1**) நாள்.**10.02.2016**ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு **11.02.2016** அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு **03.01.2019** அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை நகராட்சி கணக்கு அலுவலர் | Senior Municipal Accounts Officer | 1 |
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

| | |
|---|---|
| | மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>Class II கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும் |
| அ.கு. | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 2) | கடலூர் பெருநகராட்சி வன்னியர்பாளையம் கிராமம் வார்டு –6. ப்ளாக் –43, நகரளவு எண். 1412/1,2, 1414/2,3,4,5 pt-ல் அமைந்துள்ள ஸ்ரீஅன்னாமலையார் மனைப்பிரிவை முறைப்படுத்த அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017–ன் படி உறுப்பினர் செயலர் (பொறுப்பு), உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1954/2018/CLPA, நாள்.23.05.2018–ன்படி கொ.ஓ.ம.வ./ந.ஊ.உ.செ (க.உ.தி.கு) எண்.R.18/2018 என எண்ணிடப்பட்டு கொள்கையளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காவின் பரப்பு –27414.00 சதுரஅடியினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்கான இடத்தினை தானப்பத்திரம் மூலம் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்ட குழுமம் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைப்படத்தில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா–27414.00 சதுரஅடி இடத்தினை நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பதை ஏற்றுக் கொள்ளல ாம். (ந.க.எண்.4819/2019/எப்1) |
| 3) | கடலூர், மஞ்சக்குப்பம் மைதானத்தில் ஜீன்19 மற்றும் நவம்பர் 19 ஆகிய மாதங்களில் பொருட்காட்சி நடத்துவதற்கு 03.06.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் கோரப்பட்ட ஏலக் கேள்வித் தொகைகள் மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆகியவற்றினை மன்றத்தின் ஒப்புதலுக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>பொது ஏலத்தில் கோரப்பட்டதில் எவரம் கலந்துக் கொள்ளவில்லை.<br>அன்றைய தினம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு: |

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துக் கொண்டவர்கள் விவரம் | கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1 | எம்/எஸ் ஆர்ட்ஸ் கிரேஷன்,<br>68/3, 3ம் குறுக்கு சந்து, கங்காதரன் நகர்,<br>DSC ரோடு, சாரக்க கேட்,<br>கனாகபுரா மெயின் ரோடு, பெங்களூர். | ரூ.6,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2 | மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெயிர்மௌன்ட் அப்பர்மண்ட், பெங்களூர். | ரூ.11,100/– |
| | | 3 | தீ கிரேட் இந்தியன் சர்க்கஸ், ஈரோடு. | ரூ.8,000/– |
| அ.கு. | பொது ஏலத்தில் வரிசை எண். 2–ல் மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெங்களூர் என்பவர் உச்சப்பட்ச கேள்வித் தொகையாக ரூ.11,100/– கோரியிருந்தார்.<br>மீதமுள்ள வரிசை எண். 1, 2 மற்றும் 3ல் குறிப்பிட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2 ல் குறிப்பிட்டுள்ள மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெங்களூர் என்பவர் நாள் ஒன்றுக்கு ரூ 11,100/– என்று கொடுத்துக் கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். இந்த அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (எப்1 / 95/ 2016 ) | | | |
| 4) | கடலூர் பெருநகராட்சி மஞ்சக்குப்பம் மைதானத்தில் மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெங்களூர் என்ற நிறுவனம் 12.06.2019 முதல் 01.09.2019 வரையில் 80 தினங்களுக்கு இடம் ஒதுக்கி தருமாறு 28.01.2019–ம் தேதி விண்ணத்தின்படி கோரியுள்ளார்.<br>மேற்படி நிறுவனம் பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ள தேதிகளில் மேலும் இரண்டு நிறுவனங்கள் அனுமதி கோரி மற்றும் வரப்பெற்றதைத் தொடர்ந்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 03.05.2019 அன்று கோரியதில், ஏலம் எவரும் கோரவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச ஒரு நாள் வாடகையாக ரூ.11,100/–க்கு கோரிய மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெங்களூர் நிறுவனத்திற்கு 12.06.2019 முதல் 01.09.2019 வரை 80 நாட்களுக்கு பொருட்காட்சி நடத்த ஏதுவாக உத்திரவு வழங்கவும் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து அனுமதி பெற இவ்வலுவலக ந.க.எண்.95/2016/எப்1, நாள்.04.06.2019ல் தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி மேலாளர், தேசிய நுகர்வோர் பொருட்காட்சி, பெங்களூர் நிறுவனத்தினர் சம்மந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் தடையின்மை சான்று பெற்று அரசின் அனுமதியுடன் சமர்பிக்கும் பட்சத்தில் அதற்குண்டான கட்டணங்களை பெற்று கொண்டு மைதானத்தில் பொருட்காட்சி நடத்திக்கொள்ள மஞ்சக்குப்பம் மைதானத்தை 12.06.2019 முதல் 01.09.2019 வரை 80 நாட்கள் பொருட்காட்சி நடத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | | | |
| அ.கு. | மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தடையின்மை சான்று வழங்கியதையும் இறுதி உத்திரவு வழங்க அனுமதிக்கலாம் | | | |
| 5) | கடலூர் நகரில் 07.06.2019 முதல் 17.06.2019 வரை அண்ணா விளையாட்டரங்கில் இராணுவ ஆள் சேர்ப்பு முகாம் நடைபெறுவதை முன்னிட்டு நகர் முழுவதும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாலும், நகராட்சியில் ஆசிட், பினாயில் இல்லாத காரணத்தினாலும், விளம்பரப் பதாகைகள் ஆகியவை பொது மக்கள் கூடும் இடங்களில் வைக்க வேண்டிய காரணத்தினால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், துப்புரவு ஆய்வாளர்கள் அளித்த குறிப்பின் பேரிலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உத்தேச செலவினம் ரூ. 60000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | | | |
| அ.கு. | பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | | | |
| 6) | கடலூர் நகரில் 07.06.2019 முதல் 17.06.2019 வரை நடைபெறும் இராணுவ ஆள் சேர்ப்பு முகாம் நடைபெறுவதை முன்னிட்டு நகர் முழுவதும் துப்புரவுப் பணிகள் | | | |

மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாலும், நகராட்சியில் ஆசிட், பினாயில் இல்லாத காரணத்தினாலும், விளம்பரப்பதாகைகள் ஆகியவை பொது மக்கள் கூடும் இடங்களில் வைக்க வேண்டிய காரணத்தினால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், துப்புரவு ஆய்வாளர்கள் அளித்த குறிப்பின் பேரிலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உத்தேச செலவினம் ரூ. 60000/—க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி 06.06.2019 தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் | | திரு.டி.சேஷாத்திரி ஒப்பந்ததாரர் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | விளம்பரப் பதாகைகள் அளவு 7 5 | 7 | 2200 | 15400 | 3200 | 22400 |
| 2 | க.ழிவறை பதாகைகள் | 50 | 400 | 20000 | 450 | 22500 |
| 3 | ஆசிட் | 50 லி | 75 | 3750 | 150 | 7500 |
| 4 | பினாயில் | 50 லி | 80 | 4000 | 120 | 6000 |
| 5 | பிளாஸ்டிக் வாளி | 50 | 200 | 10000 | 220 | 11000 |
| 6 | பிளாஸ்டிக் ஜக்கு | 50 | 40 | 2000 | 80 | 4000 |
| | | | | **55150** | | **73400** |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. கே.மாரிமுத்து, கடலூர் என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.** பொதுசுகாதார அவசர, அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**7)** கடலூர் பெருநகராட்சி 2018—19ம் ஆண்டு முதல் 2020—21 வரை மூன்றாண்டு குத்தகை இனம் 4, 5 மற்றும் 15 ஆகிய இனங்கள் 07.03.2018, 16.3.18, 23.3.18, 28.3.18, 16.4.18, 15.06.18, 04.07.18, 20.07.18, 02.08.2018, 07.12.18 மற்றும் 29.01.2019 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் இதுநாள்வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. இந்த இனங்களுக்கு போட்டியிட விருப்பம் இல்லை எனத் தெரிய வருகிறது. தற்பொழுது 4 மற்றும் 5 இனங்களுக்கு மட்டும் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இனம் 15க்கு துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதில், எவரும் இப்பாதுகாப்பு பெட்டகத்தை பயன்படுத்த முன்வரவில்லை. துறை மூலம் வசூலித்தால், ரசீது புத்தகம் அச்சடிப்பது, ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்வது ஆகியவற்றிற்கான செலவு மற்றும் வருவாய் உதவியாளர்கள் இதரப் பணிகளால்பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு ஏற்கனவே வசூலித்த வைப்புத் தொகையை விட கீழ்க்கண்ட விபரப்படி அந்தந்த இனங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத்தொகையை குறைத்து ஏலம் விடவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | இனம் எண் | குத்தகை விபரம் | தினசரி வசூல் 1.4.18 முதல் 31.03.19 வரை சராசரி ரூ. | தற்போது பெற்று வரும் வைப்புத் தொகை ரூ. | இனி குறைத்து வசூல் செய்யவுள்ள வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | 4 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடியில் உட்புறம் உள்ள தரைக் கடைதாரர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 102 | | |
| | | அ) வைப்புத் தொகை | | 50000 | 30000 |
| | | ஆ)வங்கி உத்தரவாதம் அளிக்கவில்லை எனில், செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை | | 50000 | 30000 |
| | | இ)வங்கி உத்தரவாதம் | | 200000 | 150000 |
| | 5 | புதுப்பாளையம் காய்கறி நாளங்காடியில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் | 55 | | |
| | | அ) வைப்புத் தொகை | | 5000 | 5000 |
| | | ஆ)வங்கி உத்தரவாதம் அளிக்கவில்லை எனில், செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை | | 10000 | 10000 |
| | | இ)வங்கி உத்தரவாதம் | | 50000 | 50000 |
| | 15 | திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்தில் பொருள் பாதுகாப்பு பெட்டக அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | துறைமூலம் வசூல்செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டதில் எவரும் இப் பெட்டகத்தை பயன்படுத்த வரவில்லை. | | |
| | | அ) வைப்புத் தொகை | | 25000 | 20000 |
| | | ஆ)வங்கி உத்தரவாதம் அளிக்கவில்லை எனில், செலுத்தவேண்டிய கூடுதல் வைப்புத் தொகை | | 25000 | 20000 |
| | | இ)வங்கி உத்தரவாதம் | | 50000 | 50000 |

**அ.கு.** அ) கலம் 4ல் உள்ள விபரப்படி வைப்புத் தொகையை குறைத்து குத்தகை விடலாம்
ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ.பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**8)**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை எண் 92 நாள் 03.07.2007 ன்படி கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு சந்தை மதிப்பெண் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு ந.க. எண் 14703/2016/அ2 நாள் 31.07.2018ன்படி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாடகை உயர்வை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட விபரப்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

| வ.எண் | கடை எண் மற்றும் விலாசம் | நீதிப்பேராணை எண் |
|---|---|---|
| 1 | திரு.கே.கணேஷ் கடை எண் 4 பாரதி சாலை, நகராட்சி வளாகம் வரிவிதிப்பு எண் 264 | 9846/ 2019 |
| 2 | திரு.கே.கணேஷ் கடை எண் 3 பாரதி சாலை, நகராட்சி வளாகம் வரிவிதிப்பு எண் 263 | 9839/ 2019 |
| 3 | திரு.சற்குணம், கடை எண் 1 பாரதி சாலை, நகராட்சி வளாகம் வரிவிதிப்பு எண் 261 | 9868/ 2019 |
| 4 | திரு.சிங்கராஜ், த/பெ.சின்னசாமி, கடை எண் 2 பான்பரி மார்க்கெட், கடலூர் நகராட்சி மற்றும் 20 குத்தகைதாரர்கள் | 14474/ 2019 |

மேற்படி ஒவ்வொரு வழக்காண்டும் தலா ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க இந்நகராட்சி சார்பாக ஆஜராகும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ப.ஆனந்த் அவர்களின் தனது 03.04.2019 தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே ஒரு வழக்குக்கு ரூ.10000/– 4 வழக்குக்கும் ரூ.40000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

அ) அனுமதிக்கலாம்.

ஆ) அவசரஅவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**9)**

கடலூர் பெருநகராட்சி 2015–16ம் ஆண்டு முதல் 2017–18 ம் ஆண்டு வரை குத்தகை இனம் எண் 8, திருப்பாப்புலியூர் பான்பரி மார்க்கெட் ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்க திரு.துரைரங்கம் என்பவர் கீழ்க்கண்ட விபரப்படி குத்தகை எடுத்துள்ளார். அதற்கெதிரே குறிப்பிட்ட விபரப்படி தொகை செலுத்தியுள்ளார்.

**அட்டவணை 1**

**வரிவிதிப்பு எண் 2015008**

| வ. எண் | விபரம் | 2015–16 01.06.16 முதல் | 2016–17 | 2017–18 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | குத்தகை | 9000 | 12600 | 13230 | 34830 |
| 2 | சேவைவரி 14.05ரூ | 1305 | 1827 | 1918 | 5050 |
| 3 | வருமானவரி 1 ரூ | 90 | 126 | 132 | 348 |
| 4 | கல்வி வரி 0.3 ரூ | 3 | 3 | 3 | 9 |
| 5 | தொழில்வரி | 240 | 240 | 240 | 720 |
| 6 | மின்கட்டண தொகை | 15000 | 0 | 0 | 15000 |
| | மொத்தம் | 25638 | 14796 | 15523 | 55957 |

<u>அட்டவணை 2</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ. | 10000 | னு.னு. சூடி.156612 னவ.03.06.15 |
| 2 | கூடுதல் வைப்புத்தொகை | ரூ. | 10000 | னு.னு. சூடி.156613 னவ.03.06.15 |
| 3 | குத்தகை தொகை | ரூ. | 6222 | ஊாயடடயமே சூடி.1503998 னவ.30.06.15 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | குத்தகை தொகை | ரூ. | 9000 | ஊாயடடயமே ரூடி. 1500903 னவ.23.03.16 |
| 5 | வைப்புத் தொகை | ரூ, | 5490 | ஊாயடடயமே ரூடி. 1514872 னவ.23.03.16 |
| | | | 40712 | |

அட்டவணை 1ல் கண்ட விபரப்படி அன்னார் செலுத்த வேண்டிய தொகை ரூ.55957/ ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13052/16 டி2 நாள் 03.05.2017ன்படி சரக்கு மற்றும் சேவை வரி வசூலிக்க விலக்களிக்கப்பட்டதினால், சரக்கு மற்றும் சேவை வரி ரூ.5050/– போக, ரூ.50907/ ல் அன்னார் செலுத்திய ரூ.40712/ போக, மீதம் ரூ.10195/ வசூலிக்கப்பட வேண்டும். இத்தொகையை அன்னாரிடம் சட்டப்படி வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

10) கடலூர் பெருநகராட்சி 2015–2016ம் ஆண்டு முதல் 2017–2018ம் ஆண்டு வரை மூன்றாண்டு குத்தகை இனம் எண் 4, திருப்பாதிரிப்புலியூர் காய்கறி நாளங்காடியில் கட்டணம் வசூலிக்க திரு.துரைரங்கம் என்பவர் கீழ்க்கண்ட விபரப்படி குத்தகை எடுத்துள்ளார். அட்டவணை 2ல் கண்ட விபரப்படி தொகை செலுத்தியுள்ளார்.

<u>**அட்டவணை 1**</u>

**வரிவிதிப்பு எண் 2015004**

| வ.எண் | விபரம் | 2015–16 01.07.15 முதல் | 2016–17 | மொத்தம் | 2017–2018 |
|---|---|---|---|---|---|
| 1 | குத்தகை (01.07.2015 முதல் 31.03.2016 வரை) | 137768 | 190050 | 327818 | குத்தகை தொகை செலுத்தாததால், 2017–18ம் ஆண்டு குத்தகை உரிமம் புதுப்பிக்கப்படாமல், துறை மூலம் வசூலிக்கப்பட்டது. |
| 2 | சேவை வரி | 19976 | 27557 | 47533 | |
| 3 | வருமான வரி | 1378 | 1901 | 3279 | |
| 4 | கல்வி வரி | 41 | 57 | 98 | |
| 5 | தொழில் வரி | 2350 | 2350 | 4700 | |
| | மொத்தம் | 161513 | 221915 | 383428 | |

அட்டவணை 2

| | | | |
|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ.50000 | D.D.No.156614 dt.03.06.15 |
| 2 | கூடுதல் வைப்புத் தொகை | ரூ.100000 | D.D.No.156611 dt.03.06.15 |
| 3 | குத்தகை தொகை | ரூ.37768 | Challan No.1503857 dt.26.06.15 |
| 4 | இதரத் தொகை | ரூ.18433 | Challan No.1503857 dt.26.06.15 |
| | மொத்தம் | ரூ.206201 | |

மேற்படி குத்தகைதாரர் செலுத்த வேண்டிய தொகை ரூ.383428/– நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13052/16 டி2 நாள் 03.05.2017ன் படி சரக்கு மற்றும் சேவை வரி வசூலிக்க விலக்களிக்கப்பட்டதினால், சரக்கு மற்றும் சேவை வரி ரூ.47533/– போக, ரூ.335895/–ல் அன்னார் செலுத்திய ரூ.206201/– போக, மீதம் ரூ.129694/– அன்னாரிடம் சட்டப்படி வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.
1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

11) கடலூர் பெருநகராட்சி 2015–16ம் ஆண்டு முதல் 2017–18 ம் ஆண்டு வரை மூன்றாண்டு குத்தகை இனம் எண் 11, கடலூர் துறைமுகம் மணிக்கூண்டின் அருகில் உள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறை கட்டணம் வசூலிக்க திரு.பிரகாசம் என்பவர் ஆண்டுக் குத்தகை ரூ.1,30,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) குத்தகைக்கு எடுத்து அ;டடவணை 2ல் கண்ட விபரப்படி தொகை செலுத்தியுள்ளார்.

அட்டவணை 1

வரிவிதிப்பு எண் 201511

| வ. எண் | விபரம் | 2015–16 01.06.16 முதல் | 2016–17 | மொத்தம் | 2017–18 |
|---|---|---|---|---|---|
| 1 | குத்தகை | 100033 | 136500 | 23653 | உரிமத் தொகை செலுத்தி புதுப்பிக்கப் படாததால், துறை மூலம் வசூலிக்கப் பட்டது. |
| 2 | சேவைவரி | 14505 | 19792 | 34297 | |
| 3 | வருமானவரி | 1000 | 1365 | 2365 | |
| 4 | கல்வி வரி | 30 | 41 | 71 | |
| 5 | தொழில்வரி | 1175 | 1175 | 2350 | |
| 6 | மின்இணைப்பு கட்டணம் | 15000 | 0 | 15000 | |
| | மொத்தம் | 131743 | 158873 | 290616 | |

அட்டவணை 2

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ. | 50000 | D.D. No.457644 dt.03.06.15 |
| 2 | கூடுதல் வைப்புத்தொகை | ரூ. | 100000 | D.D. No.457641 dt.03.06.15 |
| 3 | குத்தகை தொகை | ரூ. | 50000 | Challan No.150099 dt.29.03.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | இதரத் தொகை | ரூ. | 28417 | Challan No.1503676 dt.23.06.15 |
| | | | 228471 | |

மேற்படி குத்தகைதாரர் திரு.பிரகாசம் செலுத்த வேண்டிய தொகை ரூ.290616/ ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13052/16 டி2 நாள் 03.05.2017ன்படி கட்டணக் கழிவறை மற்றும் குளியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் இனத்திற்கு சரக்கு மற்றும் சேவை வரி வசூலிக்க விலக்களிக்கப்பட்டதினால்,சரக்கு மற்றும் சேவை வரி ரூ.34297/– போக, ரூ.256319/ ல் அன்னார் செலுத்திய ரூ.228471/– (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து நானூற்று எழுபத்தி ஒன்று மட்டும்) போக, மீதம் ரூ.27848/– (ரூபாய் இருபத்தேழாயிரத்து எண்ணூற்று நாற்பத்தி எட்டு மட்டும்) அன்னாரிடம் சட்டப்படி வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

12) கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 2018–19ம் ஆண்டிற்கான கடலூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடலூர் நகராட்சி தேவனாம்பட்டினம் கடற்கரைச் சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி ரூ. 28.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 30.05.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 1.00% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. டி சேஷாத்திரி, கடலூர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 1.00 % குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**13)** கடலூர் பெருநகராட்சி கம்மியம்பேட்டை பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடையில் ஏற்கனவே பழுதடைந்துள்ள விறகு மூலம் எரியூட்டும் இயந்திர அமைப்பினை அப்புறப்படுத்தி இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் புதிய இயந்திர அமைப்பினை அமைக்கும் பணிமேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9,93,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் / தனிஅலுவலர்அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவசரகால பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | விலைப் புள்ளி நாள் | விலைப்புள்ளியில் கலந்துக் கொண்டவர்கள் | வேலை உத்தரவு வழங்கிய ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | வடகிழக்கு பருவமழையின் போது பாதிக்கப்படக்கூடிய பகுதியில் தேங்கும் மழைநீர் வெளியேற்ற ஜென்செட்டுகள் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரம் அவற்றினை இயக்கும் பணியாளர்களும் வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.2.00 இலட்சம் | 17.11.2018 | திரு.P. பற்குணன், கடலூர், திரு.T. சேஷாத்திரி , கடலூர் & திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் | திரு.P. பற்குணன், கடலூர் |
| 2. | வடகிழக்கு பருவமழையின் போது 15 எண்ணிக்கை புயல் பாதுகாப்பு மையங்களில் எலக்ட்ரிகல் ஜெனரோட்டர்களை வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.2.70 இலட்சம் | 17.11.2018 | திரு.V. சுரோஷ்பாபு, கடலூர், M/s RTS சவுண்ட் சர்வீஸ், கடலூர் & M/s BAS பவர்ஸ் கடலூர் | திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | கஜா புயலின் போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் 13 இடங்களில் மின்னாக்கி (15 KVA) களை வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.2.50 இலட்சம் | 09.11.2018 | திரு.V. சுரோஷ்பாபு, கடலூர்<br>திரு.P. பற்குணன், கடலூர்<br>&<br>M/s RTS சவுண்ட் சர்வீஸ், கடலூர் | திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் |
| 4. | திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை கீழ்நிலை நீர்த்தேக்கதொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்தல் பணி | ரூ.2.80 இலட்சம் | 14.08.2018 | திரு.T. சேஷாத்திரி , கடலூர்<br>&<br>திரு.P. பற்குணன், கடலூர் | திரு.T. சேஷாத்திரி , கடலூர் |
| 5. | கஜா புயலின் போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் 4 எண்ணிக்கை டீசல் மூலம் இயங்கும் ஜென்செட்கள் மற்றும் 10 எண்ணிக்கை மரம் அறுக்கும் இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.1.05 இலட்சம் | 09.11.2018 | திரு.T. சேஷாத்திரி , கடலூர்<br>திரு.P. பற்குணன், கடலூர்<br>&<br>திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் | திரு.T. சேஷாத்திரி , கடலூர் |
| 6. | கஜா புயலின் போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் குடிநீர் வசதிகாக ஜேனரேட்டர்களை வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.7.00 இலட்சம் | 09.11.2018 | திரு.V. சுரோஷ்பாபு, கடலூர்,<br>M/s RTS சவுண்ட் சர்வீஸ், கடலூர்<br>&<br>M/s BAS பவர்ஸ் கடலூர் | திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் |
| 7. | வடகிழக்கு பருவமழையின் | ரூ.2.75 இலட்சம் | 17.11.2018 | திரு.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | திரு.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போது ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய 4 எண்ணிக்கை டிராக்டருடன் கூடிய ஹைட்ராலின் டிப்பர் வாகனம் மற்றும் 1 எண்ணிக்கை டிராக்டருடன் கூடிய 6000லி கொள்ளவு தண்ணீர் டேங்பகரை வாடகைக்கு அமர்த்திடும் பணி | | | திரு.T. சேஷாத்திரி , கடலூர் & திரு.P. பற்குணன், கடலூர் | |
| 8. | கஜா புயலின் போது பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் ஜே.சி.பி வாகனங்கள் 10 எண்ணிக்கை வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.3.80 இலட்சம் | 09.11.2018 | திரு.P. பற்குணன், கடலூர் & திரு.கிருஷ்ண மூர்த்தி, பாகூர் | திரு.P. பற்குணன், கடலூர் |
| 9. | திருவந்திபுரம் தலைமைநீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண் 5 லிருந்து 4 அங்குல DI குழாய் அமைக்கும் பணி | ரூ3.00 இலட்சம் | 14.05.2018 | திரு.T. சேஷாத்திரி , கடலூர் & திரு.கிருஷ்ண மூர்த்தி, பாகூர் | திரு.T. சேஷாத்திரி , கடலூர் |
| 10. | கம்மியம் பேட்டை உரக்கிடங்கில் குப்பைகள் அதிமாக சேர்ந்து உரக்கிடங்கிற்கு உள்ளே செல்ல முடியாத நிலையில் உள்ளதால் அளவுக்கு அதிகமாக குப்பைகளை அகற்ற செயின் எஸ்கவேட்டர் வாகனம் ஒன்று வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.1.25 இலட்சம் | 01.11.2018 | M/s சாய் சரளா எர்த் மூவர்ஸ், கடலூர், M/s. பாஸ்கரன் எர்த் மூவர்ஸ், கடலூர் & M/s ஹரிபிரியங்கா எர்த் மூவர்ஸ், கடலூர் | M/s சாய் சரளா எர்த் மூவர்ஸ், கடலூர் |
| 11 | கஜா புயலின் போது பாதிக்கக்கூடிய பகுதிகளில் 10 எண்ணிக்கையில் | ரூ.3.50 இலட்சம் | 09.11.2018 | திரு.கிருஷ்ண மூர்த்தி, பாகூர் திரு.P. பற்குணன், கடலூர் | திரு.கிருஷ்ண மூர்த்தி, பாகூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டிராக்டருடன் கூடிய ஹைட்ராலிக் டிப்பர் மற்றும் 4 எண்ணிக்கை டிராக்டருடன் கூடிய 6000 லிட்டர் கொள்ளளவு டேங்கரை வாடகைக்கு அமர்த்திடும் பணி | | | &<br>திரு.T. சேஷாத்திரி , கடலூர் | |
| 12 | வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய ஜே.சி.பி வாகனங்களை வாடகைக்கு அமைத்திடும் பணி | ரூ.2.80 இலட்சம் | 17.11.2018 | M/s ஹரிபிரியங்கா எர்த் மூவர்ஸ், கடலூர்,<br>M/s சாய் சரளா எர்த் மூவர்ஸ், கடலூர், &<br>M/s. பாஸ்கரன் எர்த் மூவர்ஸ், கடலூர் | M/s ஹரிபிரியங்கா எர்த் மூவர்ஸ், கடலூர் |
| 13 | வடகிழக்கு பருவமழையின் போது மின்தடையின் கராணமாக குடிநீர் பொதுமக்களுக்கு தயையின்றி விநியோகம் செய்ய திருவந்திபுரம் , கேப்பர் மலை, சாவடி தலைமை நீரேற்று நிலையங்களில் மற்றும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்ட இந்நகராப் பகுதிகளில் மூன்று இடங்களில் குடிநீர் உந்து நிலையங்களுக்கு எலக்ட்ரிகல் ஜெனரேட்டர்களை வாடகைக்கு அமர்த்திடும் பணி | ரூ.5.60 இலட்சம் | 17.11.2018 | திரு.V. சுரேஷ்பாபு, கடலூர்,<br>M/s RTS சவுண்ட் சர்வீஸ், கடலூர்<br>&<br>M/s BAS பவர்ஸ் கடலூர் | திரு.V. சுரேஷ்பாபு, கடலூர் |
| 14 | பராதிசாலைக்கு அருகில் உள்ள வள்ளிவிலாஸ் மருத்துவமனைக்கு | ரூ.6.50 இலட்சம் | 28.02.2018 | திரு. S.கிருஷ்ணமூர்த்தி, பாகூர்,<br>திரு.P. பற்குணன், | திரு. S.கிருஷ்ண மூர்த்தி, பாகூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொந்தமான தங்கும் விடுதி கட்டிடம் மழைநீர் வடிகாலில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுதல் பணி | | | கடலூர் & திரு.T. சேஷாத்திரி , கடலூர் | |

மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.

15) கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறையின் 03.07.2007ம் தேதிய அரசாணை எண் 92ன் படி சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து வழக்கு தொடரப்பட்ட குத்தகைதாரர்கள் 01.07.2016 முதல் உயர்த்தப்பட்ட வாடகை 2018. முதல் வசூலிக்க தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து குத்தகைதாரர்கள் மேல்முறையீடு செய்யக் கூடும் என தெரியவந்ததால் நீதிப்பேராணை எண். 28293, 28502, 28953, 28957, 28962, 28965, 28968, 28971, 28973, 28978, 28980, 29228, 28915, 29231, 29233, 29237, 29319, 29327, 29518, 29558, 29565, 29569, 29618, 29627, 29632, 29633, 29636, 29640, 31653, 31657 to 31659, 31661, 31663, 31666 to 31668, 31670, 31827, 31834 31835, 32274, 33260, 33266 மற்றும் 33271 /2018 ஆகிய 50 வழக்குகளுக்கு கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஒரு கேவியட் மனு உண்டு ரூ.2500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வீதம்) (2500X50) வீதம் 50 கேவியட் மனுவிற்கு ரூ.1,25,000 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்க இந்நகராட்சி சார்பாக ஆஜரான சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி.ஆனந்த் அவர்கள் தனது 14.06.2019 தேதி கடிதத்தில் கோரியுள்ளார் இத்தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம். (ந.க.எண்.14703/16/அ2)

16) கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007ம் தேதிய அரசாணை எண்92ன் படி சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து கீழ்கண்ட குத்தகைதாரர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். இவ்வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.பி. ஆனந்த் அவர்கள் ஆஜராகி ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ10,000/— வீதம் 5 வழக்குகளுக்கு ரூ.50,000/— வழங்க கோரி தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

| வ.எண் | பெயர் | நீதிப்பேராணை எண் | வரி விதிப்பு எண் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி. சிவக்குமார் | 29613/18 | | 10,000 |
| 2 | திரு.ஏ.எம்.அய்யூப் | 32231/18 | 313 | 10,000 |
| 3 | திரு.வி.ராஜவேலு | 30852/18 | 633 | 10,000 |
| 4 | திரு.ஏ. நாகராஜன் | 30856/18 | 98 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | திரு. ஜி.பரமசிவம் | 30859/18 | 638 | 10,000 |

மேற்படித் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.14703/2016/அ2)

17) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007ம் தேதிய அரசாணை நிலை எண் 92ன் படி கடலூர் நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கும் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண் 28293/2019 முதல் 14479/2019 வரை 21.12.2018 தேதி முதல் 01.07.2019 தேதி வரை தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. இத்தீர்ப்பில் நகராட்சியால் 01.07.2016 முதல் வசூல் செய்யப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை 2018 முதல் வசூல் செய்ய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்ப்பினை எதிர்த்து கீழ்கண்ட கடையை அனுபவிக்கும் உரிமைதாரர்களின் அதற்கேதிரே குறிப்பிட்ட விபரப்படி மேல்முறையீடு செய்துள்ளனர். இம்மேல்முறையீட்டுக்கு வழக்கிற்கு தலா ரூ.15000 வீதம் வழங்க இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.பி ஆனந்த் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களின் தனது 20.06.19 கடிதத்தில் கோரியுள்ளார் மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கபடுகிறது.

| வ.எண் | மேல்முறையீட்டு எண் | வாதியின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 1779/2019 | திரு. A.G. ராஜேந்திரன் | 15000 |
| 2 | 1773/2019 | திரு. S. வைத்தியலிங்கம் | 15000 |
| 3 | 1775/2019 | திரு. S. ஜெயசந்திரன் | 15000 |
| 4 | 1777/2019 | திரு. G. வெங்கடேஷ் | 15000 |
| 5 | 1778/2019 | திரு. C.ராமமூர்த்தி | 15000 |
| 6 | 1780/2019 | திரு. A.G. ராஜேந்திரன் | 15000 |
| 7 | 1397/2019 | திரு. R. அசோக்குமார் | 15000 |
| | | | 1,05,000 |

(ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)

மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம்.

18) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 03.07.2007ம் தேதிய அரசாணை நிலை எண் 92ன் படி நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த அனைத்துக் கடைகளுக்கும் சந்தை மதிப்பிண் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேரானை எண் 28293/19 முதல் 14479/2019 வரை 21.12.18 முதல் 01.07.2019 தீர்ப்பு பெறப்பட்டது.

தற்போது மேல் முறையீடு எண் 1773, 1775, 1777 மற்றும் 1780/2019 ஆகிய வழக்கில்

| | |
|---|---|
| | சென்னை உயர்நீதிமன்றத்தில் Bench 2 மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி சார்பாக ஆஜராகும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. B. ஆனந்த் அவர்கள் தனது 04.07.19 தேதி சட்டக் கருத்துறையில் மேற்கண்ட மேல் முறையீடு வழக்ககள் the issue involved in the write appeals are of serious in nature and it is advisable to engage Mr. S.R. Rajagopal Additional Advocate General – VI Madras எனத் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே மேற்கண்ட வழக்கறிஞர் சட்டக் கருத்துறையின்படி கூடுதலாக இவ்வழக்குக்கு Mr. S.R. Rajagopal Additional Advocate General – VI Madras அவர்களை நியமனம் செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| **அ.கு.** | அ) அனுமதிக்கலாம்<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 26.06.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
கடலூர் பெருநகராட்சி.